DEPOSITION OF WITNESS

-----

IN THE COURT OF PRINCIPAL JUDGE, CHENNAI

**CC.09/2023 - PW4**

Name : Mr.K.Manivannan

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 22nd day of November, 2024.

---

எதிரி ஆஜர்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** – வா.சா.ஆ.16 நான் Mirror copy வைத்திருந்ததாக கூறவில்லை. அ.சா.ஆ 16 ல் நான் Mirror copy யை Compare செய்து சொன்னதாக இல்லை. ஏற்கனவே கொடுத்த அறிக்கையில் உள்ள பொருட்களின் விவரங்களும், தற்பொழுது உள்ள பொருட்களின் விவரங்களும் சரியாக உள்ளது என்பதைதான் குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ 14 அறிக்கை கொடுத்துள்ள நிலையில் நான் மீண்டும் மாதிரிகளை புதிதாக பெற்றிருக்க கூடாது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.14 அறிக்கையில் விசாரணை அதிகாரி அதில் உள்ள கோப்புகளை அப்படியே நகல் எடுத்து கொடுக்கும்படி கேட்டிருந்தார். அ.சா.ஆ.16 அறிக்கையில் குறிப்பிட்ட பொருட்களை மட்டும் ஆய்வு செய்து புதிதான வினாக்களுக்கு அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். பொதுவாக Hard Disk ல் செய்யப்படும் Copy, write protected கிடையாது என்றால் சரிதான். அ.சா.ஆ.16 ல் Encase version 8.0

மென்பொருள் உபயோகப்படுத்தியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். Encase மென்பொருள் மூலம் 16 வகையான Datas Attributes எடுக்க முடியும் என்றால் சரியல்ல. அதற்கு மேலும் எடுக்கலாம், நான் புலனாய்வு அதிகாரி கேட்ட Attributes ற்கு மட்டும் விளக்கம் அளித்தேன். அதிலுள்ள முக்கியமான Attributes ஆன MD5 Hash value, Item Path, True Path and Last written போன்ற முக்கியமான Attributes வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. MD5 Hash value தவிர மற்றவற்றை DVD யில் கொடுத்துள்ளேன். அ.சா.ஆ.14 ல் உபயோகப்படுத்தியுள்ள மென்பொருள் Encase version 7.0 என்றால் சரிதான். அ.சா.ஆ 14 ற்கு Encase version 7.0 யும் அ.சா.ஆ,16 ற்கு Encase version 8.0 யும் பயன்படுத்தியது தவறான வழிமுறை என்றால் சரியல்ல. Annexure 1, 3 மற்றும் 7 வேறு வேறு Device களான விளக்கங்கள் ஆகும். மேற்சொன்ன Annexure களில் உள்ள சீரியல் எண்கள் ஒன்றாக உள்ளது என்றால் சரிதான். Annexure 8 ல் Sl.No. குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.16 ல் வரிசை எண் 1 ல் Hard Disk ன் மாடல் எண் Z5K 500 ஏன்று உள்ளது என்றால் சரிதான். அதே இனத்திற்கான மாடல் எண் அ.சா.ஆ.14 ல் வேறாக உள்ளது என்றால் சரிதான். மாடல் எண் அடிக்கும் பொழுது தட்டச்சு பிழையாக அவ்வாறு அடிக்கப்பட்டுள்ளது, மற்ற விவரங்கள் சரியாக உள்ளது. நான் கூறுவது தவறு என்றாலும், அந்த Device களின் வரிசை எண்களும் நான் கொடுத்த

மற்றொரு அறிக்கையில் மாறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல, நான் அதை பார்த்துதான் கூற முடியும். அ.சா.ஆ.16 ல் பக்கம் 5 ல் பெண்டிரைவ் Item 5, 472 File கள் உள்ளது என்றால் சரிதான். சாட்சி 27.07.2015 தேதியில் உருவாக்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கைதான் 472 என்று கூறுகிறார். அ.சா.ஆ.14 ல் கொடுக்கப்பட்ட Annexure 7 ல் மொத்தம் 284 file கள்தான் உள்ளன என்றால் சரிதான். Annexure 7 என்பது Pen drive ல் பதிவு செய்யப்பட்டிருந்த சில கோப்புகள் மற்றும் Folder களின் விவரம்தான். அ.சா.ஆ.14 நான் ஏற்கனவே கூறியது போல் மொத்தமான கோப்புகளின் விவரம் கொடுக்கப்படவில்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட கோப்புகளின் விவரங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. அ.சா.ஆ.14 அறிக்கையோடு இணைத்து வழங்கப்பட்ட DVD மற்றும் ஒரு 80 GB Hard Disk ல் அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. வழக்கமாக இணைப்பு அறிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கோப்புகளின் விவரங்கள் மட்டும்தான் கொடுப்போம். அ.சா.ஆ.14 அறிக்கையில் புலனாய்வு அலுவலரின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அ.சா.ஆ.16 அறிக்கையில் கேட்டது போல் அ.சா.ஆ.14 அறிக்கைக்கு தனிப்பட்ட Device களுக்கென்று தனிப்பட்ட கேள்விகள் கேட்கப்படவில்லை. அ.சா.ஆ.16 ல் உள்ள பல கோப்புகள் அ.சா.ஆ.14 ல் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. பெண் டிரைவ்

என்பது Copied Device என்றாலும் அதற்கென்று தனியாக Source file இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. பொதுவாக பெண் டிரைவ் போன்ற ஒரு External drive ஐ ஒரு Computer System ல் போட்டு திறந்து வேலை செய்யும் போது எதேர்ச்சயாக சில பைல்கள் Delete செய்யப்படும், Modify செய்யப்டும் என்றால் சரிதான். அதனால் அந்த பைல்களின் Attributes மாறும் என்றால் சரிதான்.

( இந்நிலையில் எதிரி தரப்பில் தனிப்பட்ட  கோப்புகள் சம்பந்தமாக கேள்விகள் கேட்க வேண்டும் என்றும், அது சம்பந்தமாக MP, MLA சிறப்பு நீதிமன்றம் எண் –1 ல்  நகல் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், நகல் பெற்ற பிறகு குறுக்கு விசாரணை செய்வதாகவும் கேட்டுக்கொண்டதின் பேரில் சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |